மாதவரம் முதல் திருவொற்றியூர் வரை மெட்ரோ ரெயில் இயக்கிட வேண்டும்!

மாதவரத்தில் ‘ஹைடெக் சிட்டி’ அமைத்திட வேண்டும்!

சட்டப் பேரவையில் – மாதவரம் எஸ்.சுதர்சனம் பேச்சு!

சென்னை, ஏப்.02 –

சட்டப்பேரவையில், மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய மாதவரம் தொகுதி கழக உறுப்பினர் எஸ்.சுதர்சனம், “மாதவரத்தில் ஹைடெக் சிட்டி உருவாக்கிட வேண்டும்” என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினார்.

சட்டப்பேரவையில் எஸ். சுதர்சனம் பேசியதாவது:-

கிராமத்துத் தொழிலாளியின் பேரன் இந்த அரசு அலுவலகத்தில் அதிகாரி, வயலில் நாற்று நட்டுக்கொண்டிருந்தவர்களின் மகள், மருத்துவக் கல்லூரி மாணவி, மழைக்கு ஒதுங்கும் குடிசையில் பிறந்தவன் இன்று ஊரில் பெரிய civil engineer, தூய்மைப் பணியாளராகப் பணியாற்றிவரின் மகள் இன்று நகராட்சி ஆணையர், பேனாவைப் பிடித்து எழுதத் தெரியாத பெற்றோருக்குப் பிறந்தவன், இன்று பல்கலைக்கழகத் துணைவேந்தர், பேருந்து வசதி இல்லாத ஊரில் பிறந்தவன் இன்று போக்குவரத்து ஆய்வாளர், ஏடெடுத்துப் படிக்கத் தெரியாதவன் வீட்டுப் பிள்ளை, இன்று I.T. துறையில் அமெரிக்காவில் வேலையில் இருக்கிறான். இவை அனைத்தும் இன்று சாத்தியமானது, நம்முடைய முன்னோர்கள், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர் கலைஞர், அவர்களின் வழியிலே அந்த கொள்கைகளையெல்லாம் அவர்கள் என்ன நினைத்தார்களோ, அவர்களின் சிந்தனைகள் அனைத்தையும் செயல்படுத்திக்கொண்டிருக்கின்ற நம்முடைய கழகத்தின் தலைவர் முதல்வர், மற்றும் நேற்றையதினம் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பாக இருந்து, வக்ஃப் சட்டத்தை எதிர்த்து சட்டமன்றத்தில் B.J.P. தவிர்த்து, அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்ற முதல்வர் அவர்களை வணங்குகிறேன்.

இன்றைய தினம் தன்னுடைய துறையிலே மிக அருமையாகப்பேசி பல திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கின்ற, வருங்காலத்திலே நம்முடைய இயக்கத்தைத் தலைமையேற்று நடத்தவிருக்கின்ற, வரும் போதே “I belong to the Dravidian stock” ‘இந்தி தெரியாது போடா’ என்று முரசாக விளங்கி (மேசையைத் தட்டும் ஒலி) கொள்கைகளைப் பறைசாற்றுகின்ற, இளைஞர்கள் மற்றும் மாணவர்களை நல்வழிப்படுத்தும்விதமாக இந்திய தேசத்தின் விளையாட்டு மாநிலமாக தமிழ் நாட்டை மாற்றியிருக்கின்ற எங்கள் துணை முதல்வர் அவர்களுக்கு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

இயற்கை நமக்கு தூய்மையான காற்று, தூய்மையான தண்ணீர், மழைவளம், ஆறுகள், நதிகள், கடல், அரிய மரங்கள், தாவரங்கள் மற்றும் அருமையான விலங்கினங்கள் என்று பல்வேறு இயற்கை வளங்களைக் கொடுத்து, மனிதன் நன்றாக வாழ வேண்டும் என்று வாழ்த்தி, இந்த அருமையான பூமி பந்தைக் கொடுத்திருக்கிறது.

ஆனால், நாம் என்ன செய்கிறோம். நமக்கு இயற்கை தந்த அந்த பூமி பந்தை சரியாகப் பயன்படுத்தாமல் அதை முழுமையாக மாசுபடுத்தி, வனங்களை அழித்து, விலங்கினங்களை அழித்து, பல்லுயிர்களை அழித்து, சுற்றுச்சூழலை மாசுபடுத்திவிட்டு, இன்று இந்த பூமியைவிட்டு நிலாவில் குடியேற முடியுமா அல்லது செவ்வாய் கிரகத்தில் நீர் இருக்கிறதா என்று என்று ஆய்வுகளை நடத்திக்கொண்டிருக்கிறோம்.

மரத்திற்கு கிளைகள் உண்டு;
பூமிக்கு கிளைகள் இல்லை
மரத்திற்கு கிளைகள் உண்டு;
பூமிக்கு வேறு கிளைகள் இல்லவே இல்லை. பூமிக்கு மாற்று வேறு எங்கும் இல்லை என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்கின்றேன். நாம் வாசம் செய்ய வரமாகக் கொடுக்கப்பட்ட பூமியை நாம் காப்பாற்றியே ஆக வேண்டும் என்பதை நான் இங்கே சொல்லக்கடமைப்பட்டிருக்கிறேன். நாம் வாழும் உலகமானது, நீர், நிலம், நெருப்பு, காற்று மற்றும் ஆகாயம் ஆகிய 5 அமைப்புகளைக் கொண்டது. உலகம் தோன்றி உயிரனங்களின் தொடக்கம் நிகழ்ந்தது. அப்போது, பூமியானது மிகவும் தூய்மையாக இருந்தது. நிலம் செழிப்பாக இருந்தது. நீர் தூய்மையாக இருந்தது. காற்று மாசுபாடு அடையாமல் தூய்மையாக விளங்கியது. பருவமழை தவறாமல் பெய்தது. தண்ணீர் என்ற அபூர்வமான திரவத்தைக் கொட்டிக்கொடுத்தது நமக்கு இயற்கை. ஹைட்ரஜன் வாயு இரண்டு பங்கும், பிரான வாயு என்று சொல்லக்கூடிய ஆக்சிஜன் ஒரு பங்கும் சேர்ந்துதான் தண்ணீர் உருவாகிறது. இதை Antoine Lavoisier என்ற விஞ்ஞானி 1785ல் கண்டுபிடித்தார். தண்ணீருக்கு நிறம் கிடையாது. தண்ணீரில் நீங்கள் எந்தப் பொருளை கலந்தாலும், எந்த நிறத்தை கலந்தாலும், அந்த நிறத்தைத்தான் அந்த தண்ணீர் காட்டும். ஆக, தண்ணீர் அவ்வளவு தூய்மையான திரவம். அதைக் காப்பாற்றியே ஆக வேண்டும் என்ற நிலையிலே நாமெல்லாம் இங்கே இருக்கின்றோம்.

தமிழ்நாடு மாநிலம் இயற்கையாகவே மிகப்பெரிய வன வளங்களைக் கொண்ட மாநிலமாகத் திகழ்கிறது. மாநிலத்தினுடைய மொத்த நிலப்பரப்பான ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ச.கி.மீ. பரப்பளவில், 26,419 ச.கி.மீ. வனப் பரப்பும், 4,424 ச.கி.மீ. மரப்பரப்பும் அமைந்திருக்கிறது. இது மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில் 23.60 விழுக்காடாகும். பல்வேறு மர இனங்களைக் கொண்டுள்ளதில் இந்திய அளவிலே தமிழ்நாடு இரண்டாவது இடம் பெற்றிருக்கின்றது. 17,672 பூக்கும் தாவர இனங்களைக்கொண்டு, தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் இடத்தைப் பெற்றுள்ளது. ஆக, இவ்வளவு பூக்கும் தாவர இனங்களைக் கொண்டதுதான் தமிழ் நாட்டினுடைய சிறப்பு என்பதை நான் இங்கே பதியக்கடமைப்பட்டிருக்கிறேன். 1,559 மருத்துவத் தாவரங்கள், 533 அரிய வகைத் தாவர இனங்கள், 230 விளிம்பு நிலையில் உள்ள தாவர இனங்கள் தமிழ்நாட்டில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் வனவிலங்குகளுக்காக, 5 புலிகள் காப்பகங்கள், 15 வன உயிரினச் சரணாலயங்கள், 15 பறவைகள் சரணாலயங்கள், 5 தேசிய பூங்காக்கள், 3 உயிர்க்கோள காப்பகங்கள், 4 யானைக் காப்பகங்கள் 3 உயிரியல் பூங்காக்கள் உள்ளன.

தெற்காசியாவின் முதல் கடல் பூங்கா!

சுமார் 10,500 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் தெற்காசியாவினுடைய முதல் கடல் தேசியப் பூங்காவாக நம்முடைய மன்னார் வளைகுடா விளங்குகிறது என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மன்னார் வளைகுடா பகுதி, நான்கு மாவட்டங்களில் 365 கி.மீ. நீளத்திலே, மக்கள் வசிக்காத 21 தீவுகளைக் கொண்ட உலகின் வளம் மிகுந்த கடல் பல்லுயிர் பரப்பாக விளங்குகிறது என்பதை நான் இங்கே பதிய வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். 1,076 கி.மீ. நீளமுள்ள இரண்டாவது நீளமான கடற்கரை கொண்ட மாநிலமாக தமிழ் நாடு விளங்குகிறது. அதிலே கடற்பாம்புகள், ஓங்கினங்கள், திமிங்கலங்கள், நட்சத்திர மீன்கள், கடல் புற்கள், ஆமைகள், கடல் பசு மற்றும் கடல் பாசிகள் போன்ற கடல் வளங்களைக் கொண்டிருக்கிறது. உலகில் காணப்படும் மிக முக்கிய ஆறு ஆமையினங்களிலே பெருந்தலை, பச்சை ஆமை, அழுங்காமை, ஏழுவரி ஆமை மற்றும் சித்தாமை போன்ற ஐந்து இனங்கள் தமிழ்நாட்டிலே இருக்கின்றன. உலகின் காலநிலை மாற்றத்தால் ஏற்பட்டிருக்கின்ற இடர்பாடுகளைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாட்டின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும், ஆட்சி ஏற்பட்டவுடன், 2021-ஆம் ஆண்டு கழக ஆட்சி துவங்கியவுடன், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் மேலான வழிகாட்டுதல்படி பசுமைத் தமிழ்நாடு இயக்கம், தமிழ்நாடு ஈர நில இயக்கம், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் மற்றும் தமிழ் நாடு நெய்தல் மீட்சி இயக்கம் என நாடுபோற்றும் நான்கு இயக்கங்களைத் துவக்கி, நாட்டிற்கே முன்மாதிரி மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருப்பதை நான் மகிழ்ச்சியோடு இங்கே பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2030-2031-ஆம் ஆண்டில் நம் தமிழ்நாட்டின் வனப்பரப்பு மற்றும் மரப்பரப்பும் சேர்ந்து 33 விழுக்காட்டினை கட்டாயமாக எட்ட வேண்டுமென்ற உயரிய இலட்சியத்துடன் பசுமைத் தமிழ்நாடு இயக்கம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இதுவரை நாம் 2021-2023 ஆண்டுகளில் 3 கோடியே 14 இலட்சம் மரக்கன்றுகளும், 2023-2024 ஆம் ஆண்டில் 3 கோடி 70 இலட்சம் மரக்கன்றுகளும், 2024-2025-ஆம் ஆண்டில் 2 கோடியே 8 மரக்கன்றுகளும் நடவு செய்து, அவற்றைப் பராமரித்துக்கொண்டு வருகிறோம். கழக ஆட்சியிலே மாநிலத்திலுள்ள ஈர நிலங்களைப் பாதுகாக்க, தமிழ்நாடு மாநில ஈர நில இயக்கம் துவக்கப்பட்டிருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான ஈர நிலக் குழு அமைக்கப்பட்டு, அதன்மூலமாக ஈர நிலங்களை அடையாளம் கண்டு, அதனைப் பாதுகாக்க சீரிய முயற்சிகள், நம்முடைய முதல்வர் அவர்களின் ஆலோசனைப்படி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். ஈர நிலங்களின் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்தும் பகுதிகளுக்கு ராம்சார் தளம் என்ற சர்வதேச அந்தஸ்து வழங்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் இருக்கின்ற 89 ராம்சார் தளங்களில் தமிழ்நாட்டில் மட்டும் 20 ராம்சார் தளங்கள் உள்ளன என்பதை நான் பெருமையோடு இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கழக ஆட்சியிலே 19 ராம்சார் தளங்களுக்கு சர்வதேச அந்தஸ்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே பதிய வைக்க விரும்புகிறேன். இதன்மூலம் ராம்சார் தளங்களைக் கொண்டுள்ள மாநிலங்களின் வரிசையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது. கழக ஆட்சியிலே தமிழ் நாடு காலநிலை மாற்ற இயக்கம் துவங்கப்பட்டு, பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் மாற்றங்களை எதிர்கொள்ள தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் ஆட்சிமன்றக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற முன்னெடுப்பை நாட்டிலேயே தமிழ்நாடுதான் முதன்முதலாக செயல்படுத்தி முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்பதை நான் இங்கே பதிய வைக்க விரும்புகிறேன்.

பசுமைப் பள்ளிகள் திட்டம்!

இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாட்டில் கடந்த 2022-ஆம் ஆண்டு தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 1.0 நடத்தப்பட்டது. இதில் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் சூழல் பாதிப்புக்களை எதிர்க்கொள்ள சர்வதேச அளவில் எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து விவாதிக்கப்பட்டது. அதேபோன்று 2024-ஆம் ஆண்டு காலநிலை உச்சி மாநாடு 2.0 நடத்தப்பட்டது. நிலைத்தன்மை மற்றும் சுற்று ச்சூழல் விழிப்புணர்வை நோக்கிய ஒரு முன்னோடி நடவடிக்கையாக ஜூலை மாதம் 27-ஆம் நாள் 2023-ஆம் ஆண்டு பசுமைப்பள்ளிகள் திட்டத்தைத் தொடங்கி, இந்த மாறுபட்ட முயற்சியானது மாநிலத்திலே கல்வி சூழலியலில் அழிக்க முடியாத அடையாளத்தை உறுதியாக ஏற்படுத்தும் என்ற எண்ணத்துடன் உருவாக்கப்பட்டிருக்கிறது.

பசுமைப் பள்ளிகள் திட்டமானது கல்வி மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை இணைக்கும் நிலையான எதிர்காலத்தை நோக்கிய ஒரு முன்மாதிரி திட்டமாகும். கல்வி நிறுவனங்களுக்குள் (மணியடிக்கப்பெற்றது) சூழல்சார்ந்த நட்புறவு நிலைமைக் கொண்ட கலாச்சாரத்தை வளர்ப்பதும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தினுடைய சுற்று ச்சூழல்களுக்கான பொறுப்புணர்வை ஏற்படுத்திக் கொடுப்பதும் இத்திட்டத்தினுடைய அடிப்படை நோக்கமாகும். கழக ஆட்சியிலே, நிலையான நகர்ப்புற வளர்ச்சிக்கு வித்திடும் வகையிலே நகரங்களுக்கு முன்னுதாரணமாக மாநிலத்திற்குள் உள்ள நான்கு நகரங்களை carbon நடுநிலை மையங்களாக மாற்றுவதற்கான இலட்சிய திட்டம் ஒன்று தமிழ்நாட்டில் நம்முடைய முதல்வர் அவர்களால் துவங்கப்ப ட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கு முன்னோடியாக நீலகிரி, கோயம்புத்தூர், ராஜபாளையம், இராமேஸ்வரம் ஆகிய நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற வகையிலே அவைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாடு அரசு காலநிலை மீள்திறன் மற்றும் நிலைத்த ஊரக வளர்ச்சியை நோக்கிய பயணத்தில், முதற்கட்டமாக 10 கிராமங்களை காலநிலை மீள்திறன் கொண்ட கிராமங்களாக மாற்றும் குறிக்கோளோடு இந்த அரசு பயணித்து வருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுள் ஒன்றான நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள கோடியக்கரை, (மணியடிக்கப்பெற்றது) திருவாரூர் மாவட்டத்திலுள்ள முத்துப்பேட்டை மற்றும் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள கொடைக்கானல் ஆகிய ஊர்கள் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் சவால்களை மற்றும் காலநிலை மீள்திறன் சூழலுக்கு உகந்த நடைமுறைகளை முன்னிலைப்படுத்த ஓர் எடுத்துக்காட்டாக எடுத்துக்கொள்ள வேண்டும் .

அலையாத்திக் காடுகள்!

இதுபோன்ற பல்வேறு நடவடிக்கைகளின் மூலமாக கிராமங்களில் காலநிலை மீள்திறனை அதிகப்படுத்துவதை இந்த அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. நம்முடைய இந்திய நாட்டில் 9 மாநிலங்கள் மற்றும் மூன்று யூனியன் பிரதேசங்களில் அலையாத்திக் காடுகள் காணப்படுகின்றன. அவற்றில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க வகையில் அலையாத்திக் காடுகளைக் கொண்டுள்ளது.

அலையாத்திக் காடுகள், கடலோர பாதுகாப்பு மற்றும் பல்லுயிர்ப் பாதுகாப்பில் முக்கியப் பங்காற்றி வருகின்றன. அலையாத்திக்காடுகள் ஆழிப்பேரலைப் போன்ற பேரிடரால் ஏற்படும் கடல் அரிப்பைத் தடுப்பதற்கும், வளிமண்டலத்தில் வெளிப்படும் கரிய அமில வாயுவை அதிகப்படியாக உட்கிரகித்துச் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் உதவுகிறது. நம்முடைய Forest Survey of India 1987 ஆம் ஆண்டு, தமிழ்நாட்டில் 23 சதுர கிலோமீட்டர்தான் அலையாத்திக் காடுகள் இருந்தன என்று தெரிவிக்கின்றன.

அதன் பின்னர், இப்போது 2021ல் மேற்கொள்ளப்பட்ட survey மூலமாக அது 41 சதுர கிலோ மீட்டராக பரப்பளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது நமது ஆட்சி ஏற்பட்டு, இப்போது 23 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் புதியதாக அலையாத்திக் காடுகள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். முதல்வர் அவர்கள் ஆணைக்கிணங்க தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம் துவங்கப்பட்டிருக்கின்றது.

கடல்வாழ் பல்லுயிர்களைப் பாதுகாக்கவும், கடற்கரை வழிப் பகுதிகளை மேம்படுத்தவும், கடல் சார்ந்து வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தவும் தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம் உறுதிக் கொண்டுள்ளது. உலக வங்கி உதவியுடன் அடுத்த 5 ஆண்டுக்கு ரூபாய் 1,685 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தால் 13 கடற்கரை மாவட்டங்களிலுள்ள 608 மீனவ கிராமங்கள் மற்றும் அதிலுள்ள 12 இலட்சத்திற்கும் மேற்பட்ட மீனவ சமூகத்தினர் பயனடைவார்கள்

வன உயிரின மனித மோதல்கள் வனத் துறைப் பணியாளர்களுக்கு மிகப்பெரும் சவாலாக உள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில், யானை வழித்தடத்தில் அமைந்துள்ள railway இருப்புப் பாதையால் யானைகள் அடிக்கடி இரயில் விபத்தில் சிக்கி உயிரிழக்கின்றன. இதற்கு தீர்வுகாணும் வகையிலே தமிழ்நாடு முதல்வர் அவர்கள், ஆணைக்கிணங்க செயற்கை நுண்ணறிவுமூலம் railway இருப்புப்பாதை அருகில் முகாமிடும் யானைகள் கண்காணிக்கப்பட்டு, அதன் விவரம் railway துறைக்கு தெரியப்படுத்தி, அதன்மூலமாக இரயிலின் வேகம் கட்டுப்படுத்தப்பட்டு, யானைகள் விபத்தில் சிக்குவது தடுக்கப்படுகிறது. மனித வன உயிரினங்களின் மோதல்களின் காரணமாக உயிரிழக்கும் அல்லது நிரந்தர ஊனம் ஏற்படும் நபர்களுக்கு இழப்பீடாக ரூபாய் 5 இலட்சம் வழங்கிய நிலையில், நமது அரசு அமைந்தவுடன் நம்முடைய முதல்வர் அவர்கள் தாயுள்ளத்தோடு இழப்பீட்டுத் தொகையினை ரூபாய் 10 இலட்சமாக உயர்த்தி ஆணை வழங்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

தேவாங்கு இனப் பாதுகாப்பு!

அழிவின் விளிம்பிலுள்ள அரிய வகை தேவாங்கு இனம் திண்டுக்கல், கரூர் மாவட்டங்களிலே உள்ளடக்கிய வனப்பகுதியில் வாழ்கின்றன. இவை கிழக்கு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் சில பகுதியில் பரவியுள்ளன. நமது கழக அரசு பொறுப்பேற்றதும் இந்தியாவில் முதல் தேவாங்கு வன உயிரின சரணாலயத்தை திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் 11,806 ஹெக்டர் நிலப்பரப்பில் ஏற்கெனவே அறிவித்துள்ளது.

இது தேவாங்கு இனத்தின் பாதுகாப்பு மற்றும் அறிவியல் ஆய்வுகளுக்கு உதவியாக இருக்கும். அழிவின் விளிம்பில் உள்ள தேவாங்கு இனத்தின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்த திண்டுக்கல் மாவட்டம், அய்யலூரில் தேவாங்கு பாதுகாப்பு மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரியவகை கடல் உயிரின மான கடல் பசுவை பாதுகாக்கின்ற வகையில், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களை உள்ளடக்கிய 448 சதுர கிலோ மீட்டர் கடல் பரப்பைக் கொண்டுள்ள அந்த இடங்களில் பாதுகாப்பு மையம் ஒன்று மனோராவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2 ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய சட்டமன்றப் பேரவையில் சென்னையில் Hitech City உருவாக்கப்படும் என்று ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அது மாதவரத்தில் உருவாக்கப்பட வேண்டும். நம்முடைய முதல்வர் அவர்கள் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 7,000 கோடி ரூபாய்க்குமேல் நிதி செலவு செய்து வருகிறார்கள். தற்போது வடசென்னை மக்கள் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். பல திட்டங்கள் வடசென்னைக்குக் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. Hitech City அங்கு அமைந்தால் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஏழை மாணவர்கள், இளைஞர்கள் இருக்கின்ற அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டால், அவர்களை ஊக்குவிப்பதாக அமையும்.

அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா: முதலமைச்சர் அவர்களின் இந்த நல்லாட்சியில்தான் வடசென்னை, பட்டாபிராமிற்கு என தனியே ஒரு Tidel Park வழங்கப்பட்டு, அங்கு ஒரு மிகப் பெரிய IT புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறார் நம்முடைய திராவிட நாயகன் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று அருமை அண்ணன் உறுப்பினர் அவர்கள் சொன்ன HiTech City நிச்சயமாக வெகுவிரைவில் வரும். Financial closure க்காகச் சென்றிருக்கிறது. நிச்சயமாக அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாதவரம் தொகுதி கோரிக்கைகள்

1. மாதவரம் ரவுண்டானா முதல் சோழவரம் டோல்கேட் வரை உயர்மட்ட மேம்பாலம் கட்டுவதற்கு தமிழ்நாடு அரசுக்கு GNGST விட்டு தரவேண்டும் என ஒன்றிய அரசு கோரிக்கை வைக்கிறது தமிழக அரசு சார்பாக முடியாது என சொல்கிறது. ஒன்றிய அரசு அதிகாரிகளிடம் பேசி பெற்று தர வேண்டும்.

2. மாதவரம் முதல் திருவொற்றியூர் வரை மெட்ரோ ரயில் இயக்க வேண்டும்.

3. கலைக்கல்லூரி அமைக்க வேண்டும்.

4. மாதவரம் முதல் சோழவரம் வரை மெட்ரோ ரயில் இயக்குவதற்கான DPR திட்ட அறிக்கை தயாரிக்கப்படுவதாக அறிகிறேன் இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

5. மாதவரத்தில் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள காலியிடத்தில் நீதிமன்றம் சார்நிலை கருவூலம். பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு சொந்த கட்டிடம் கட்ட வேண்டும்.

6. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் மேலும் ஒரு ஐ டெக் சிட்டி வரும் என அறிவிப்பு வரப்பெற்றது. அது வடசென்னை பகுதியில் மாதவரத்தில் அமைய வேண்டும் என வலியுறுத்தினேன். அதற்கான முன்னெடுப்பு நடவடிக்கைகளை டிட்கோ மூலமாக நமது தொழில்துறை அமைச்சரும் ஐ.டி. அமைச்சரும் சேர்ந்து எடுத்து கொண்டிருக்கின்றனர் அதை விரைவுபடுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

7. பொன்னேரி தாலுகா 232 ஊராட்சிகளை கொண்டது. அரசு திட்டங்கள் மக்களை சென்றடைவதற்கு கால தாமதமாகின்றது. ஆகையால் பொன்னேரி தாலுகாவை இரண்டாக பிரித்து செங்குன்றத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுகா உருவாக்க வேண்டும்.

8. வில்லிவாக்கம் ஒன்றியத்தில் மோரை வெள்ளானூர், பாலவேடு ஊராட்சிகளை ஆவடி மாநகராட்சியுடன் இணைத்தால் இந்த ஊராட்சியில் உள்ள நீர்பிடிப்பு பகுதியாக இருப்பதால் நீர்பிடிப்பு பாதிக்கப்படும் விவசாய பூமிகள் அடுக்கு மாடி குடியிருப்புகளாக மாறிவிடும் கால்நடைகள் வளர்ப்பு பாதிக்கப்படும். இப்பகுதியில் விவசாயம் அழிந்து போகும் சுற்றுச்சூழல் மாசுபடும். அருகாமையில் உள்ள புழல் ஏரி நீர் மாசுபடும் ஆகையால் ஆவடி மாநகராட்சியுடன் இப்பகுதியை இணைப்பதற்கு அங்கு வசிக்கும் மக்கள் போராட்டம் நடத்தி எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். எனவே இந்த இணைப்பு நடவடிக்கையை கைவிட வேண்டும்.

9. மாதவரம் தொகுதி பொன்னேரி வட்டம் சோழவரம் பிர்க்கா பாடியநல்லூர் வருவாய் கிராமத்தில் புல எண்.77 முதல் 109 வரையிலான பட்டா நிலங்களில் 400க்கு மேற்பட்ட குடும்பங்கள் 100 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வருகின்றனர். 1957வரை அரசு பதிவேட்டில் நஞ்சை நிலங்களாக இருந்து வந்தது அந்த பட்டாரத்து செய்யப்பட்டது. பின்னர் 1962ல் அரசு வருவாய் பதிவேட்டில் தவறுதலாக ஏரி உள்வாய் என வகைப்பாடு செய்யப்பட்டது. 1971-ல் கலைஞர் ஆட்சியில் இதை கண்டறிந்து விசாரணை நடத்தி மீண்டும் ரயத்துவாரி பட்டா வழங்கப்பட்டது. இப்பட்டாக்கள் 2014ம் ஆண்டு கணினி மயமாக்கும் போது பதிவேற்றம் செய்யவில்லை. வருவாய் துறை அதிகாரிகளால் வழங்கப்பட்ட விசாரணை அறிக்கையில் கணினி மயமாக்கும் போது ஏற்பட்ட பிழையினை ஒப்புக்கொண்டு அறிக்கை சமர்பிக்கப்பட்டது அந்த அறிக்கையின்படி கணினி மயமாக்கப்பட்ட பட்டா வழங்கிட வேண்டும்.

10. மாதவரம் தொகுதியில் சென்னை மாநகராட்சி மண்டலம் II மற்றும் III-ல் உள்ள வார்டுகளுக்கு உட்பட்ட பகுதியில் வீடுகள் தோறும் மெட்ரோ குடிநீர் இணைப்பு வழங்கப்படாத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்க வேண்டும்.

11. பழைய எருமை வெட்டிப்பாளையம், புதிய எருமை வெட்டி பாளையம் ஊராட்சி கிராமங்களுக்கு செல்லும் சாலை வனப்பகுதியின் வழியாக 3 கி.மீ. சாலை செல்கிறது. இந்த சாலை வண்டி பாதை போன்று 12 அடி அகலம் உள்ளது. ஒரு வண்டி சென்றால் எதிர்புரம் வரும் வண்டி விலகி செல்வதற்கு போதிய பாதை வசதி இல்லை. இந்த சாலை அமைப்பதற்கு கடந்த ஒரு ஆண்டு காலமாக ஆன்லைனில் பதிவு செய்து நிலுவையில் உள்ளது. எனவே உடனடியாக நடவடிக்கை எடுத்து அனுமதி வழங்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

12. பாடியநல்லூர் ஊராட்சியில் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பதற்கு கடந்த ஆண்டு ஆய்வு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. இப்பணிக்கு அனுமதி வழங்கி விரைந்து செயல்படுத்திட வேண்டும்.

13. கும்மிடிப்பூண்டி, பொன்னேரி, மாதவரம் உள்ளடக்கி மாதவரத்தை தலைமையிடமாக கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க வேண்டும்.

இவ்வாறு மாதவரம் எஸ். சுதர்சனம் பேசினார்.

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

VI ஆம் பக்கத் தொடர்ச்சி

கோட்டை - 1.சேலம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) பி. கோபிநாத் எச் - 16, பெரியா நகர், செவ்வாய்பேட்டை, சேலம் -2. 2) எம். விஜயகுமார் 186/எம்—பிளாக், அண்ணா நகர், கோட்டை, சேலம் - 1. 3) ஜெ. பிரபு ராமச்சந்திரன் 297, எஸ். பிளாக், அண்ணா நகர், கோட்டை., சேலம் - 1. 4) வி. பெருமாள் 368, அண்ணா நகர்.கோட்டை - 1. 5) பி. கதிர்வேல் 84, இளங்கோ தெரு, சேலம் - 9.

அரிசிப்பாளையம் பகுதி

அமைப்பாளர் - பி.செங்கோடன் பழனி பி-4, கோர்ட் தேராடு காலனி, மரவனேரி, சேலம் - 7.

துணை அமைப்பாளர்கள் - 1) சாரதி 74/31, கார்ப்பெட் தெரு, பொன்னம்மாபேட்டை, சேலம் - 1. 2) தனுஷ்குமார் 16/80, கார்ப்பெட் தெரு, பொன்னம்மாபேட்டை, சேலம் - 1. 3) ஆர். கருணாநிதி 24, கோர்ட் ரோடு காலனி, மரவனேரி, சேலம் - 7. 4) ஏ. சின்னான் 99/1, காந்தி நகர், கோர்ட் ரோடு காலனி, மரவனேரி, சேலம் - 7. 5) யுவராஜ் 170/எப், ரயில்வே லைன், வடக்கு தெரு, பொன்னம்மாபேட்டை, சேலம் - 1.

அம்மாபேட்டை பகுதி

அமைப்பாளர் - சி. மதிவாணன் 129, பச்சப்பட்டி மெயின் ரோடு, சன்னியாசிகுண்டு, சேலம் - 15.

துணை அமைப்பாளர்கள் - 1) எம். சிவமணி 245, வித்யா நகர் 8வது கிராஸ், கிச்சிபாளையம், சேலம் - 15. 2) பி. மாதேஸ்வரன் காந்தி நகர் காலனி, காமராஜ் நகர் காலனி, சேலம் - 636014. 3) சி. சந்திரசேகர் 272/11இ, பச்சப்பட்டி மெயின் ரோடு, சன்னியாசிகுண்டு, சேலம் - 636015. 4) எம். சதாசிவம் 12, பழனிமுத்து ரோடு, வித்யா நகர், சேலம் - 636015. 5) மா. தங்கவேல